### நகரங்கள்தோறும் புதிய பேருந்து நிலையங்கள் – பாதாள சாக்கடைத் திட்டங்கள் – பூங்காக்கள்!

# இந்தியாவிலேயே நகர்ப்புற வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது!

## சட்டப்பேரவையில் – நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை மீதான பதிலுரையில்

## முதல்வரின் சாதனைகளைப் பட்டியலிட்டு – அமைச்சர் கே.என்.நேரு பெருமிதம்!

**சென்னை, மார்ச் 27 -**

**சட்டப்பேரவையில் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு அத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் பதிலளித்து நேற்று முன்தினம் உரையாற்றினார். அமைச்சர் கே.என்.நேரு தனது பதிலுரையில் நகரங்கள் தோறும் புதிய பேருந்து நிலையங்கள், பாதாள சாக்கடைத் திட்டங்கள், பூங்காக்கள் அமைக்கப்படும் என்றும் இந்தியாவிலேயே நகர்ப்புற வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது என்றும் குறிப்பிட்டார்.**

**இது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைமானியக் கோரிக்கையில் அமைச்சர் கே.என்.நேரு அவர்களின் பதிலுரை வருமாறு:-**

பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு முதன்முதலாக இந்த அவையில் நான் அமைச்சராகப் பொறுப்பேற்றேன். நம்முடைய தமிழக முதல்வர், அன்றைக்கு முதல்வராக இருந்த அண்ணன் தலைவர் கலைஞர் அவர்களால், நான், IP போன்றவர்கள் எல்லாம் 1986ல் ஒன்றிய பெருந்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவ்வாறு ஒன்றிய தலைவராக வந்தவரை சட்டமன்ற உறுப்பினராக்கி, சட்டமன்ற உறுப்பினரை அமைச்சராக பொறுப்பேற்க வைத்து, அமைச்சராக பொறுப்பேற்றது மட்டுமல்ல, அமைச்சராக எவ்வாறு கோப்புகளை கையாள வேண்டும்? எப்படி அதிகாரிகளோடு நாங்கள் பழக வேண்டும்? அதிகாரிகளை நாங்கள் எவ்வாறு மரியாதையாக நடத்த வேண்டும் என்பதையெல்லாம் எங்களுக்கு கற்றுத் தந்து, ஒரு சாதாரண கிராமத்தில் விவசாயத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் நாங்கள்; ஊர் பஞ்சாயத்துக்காரர்களாக இருந்தவர்கள் நாங்கள். எங்களை இந்த அமைச்சர் பொறுப்பிற்கு கொண்டுவந்து, இன்றைக்கு தமிழகம் முழுவதும் அறிந்துகொள்ளும் வகையில் உருவாக்கித் தந்தவர் அண்ணன் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன்.

அடுத்ததாக, தலைவர் கலைஞர் அவர்களோடு, தளபதி அவர்கள் பல்வேறு பொறுப்புகளில் தொடர்ந்து நாற்பது ஆண்டுகாலம் பணியாற்றி, தலைவர் கலைஞர் அவர்களுக்குப் பிறகு அவர் தந்த இடத்தைக் குறைக்காமல், கூடுதலாக்கி, 20 ஆண்டுகாலம் மாவட்டச் செயலாளர்களாக இருந்த எங்களை, தலைமைக் கழகத்திலே முதன்மைச் செயலாளர்களாக உருவாக்கி, உயர்வையும், ஏற்றத்தையும் தந்து, நீங்கள் சொன்னதுபோல், பெரிய இலாகாவின் பொறுப்பை தந்து, எங்களை உருவாக்கித் தந்தவர் அண்ணன் தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த பிறப்பு என்பது அவர்களுக்கான பிறப்பு என்று முடிவு செய்து பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

அப்படிப்பட்ட தலைவர் அவர்களை வணங்குகிறேன். அடுத்து, துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற நம்முடைய உதயநிதி அவர்கள், ஒரு காலத்தில் கல்வித் துறையில் விளையாட்டுத் துறை இணைந்திருந்ததை தனியாக விளையாட்டுத் துறை என்று மாற்றி, அதற்கு அமைச்சராக பொறுப்பேற்று, இன்றைக்கு சென்னையிலே, விளையாட்டுத் துறையில் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் ஒரு முன்னணி மாநிலமாக உருவாக்கித் தந்திருக்கிற தம்பி உதயநிதி அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தையும், வாழ்த்துகளையும் தெரிவித்து (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய உரையை, தலைவர் கலைஞர் அவர்களை நினைத்து, தளபதி அவர்களை நினைத்து, என்னுடைய சக அமைச்சர் பெருமக்கள் எல்லாம் இங்கு இருக்கிறார்கள்.

### கலைஞரை நினைக்காமல் இருப்பதில்லை!

என்னுடன் 4 முறை அமைச்சராக இருந்தவர்களும் இருக்கிறார்கள், இன்றைக்கு புதிதாக அமைச்சராக வந்தவர்கள், 2 முறை, 3 முறை அமைச்சராக இருந்தவர்களும் இருக்கிறார்கள். இ. பெரியசாமி அவர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சராக இருக்கிறார். அதிலே, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திலே ஒரு மாறுதல் வருகிறது. ஆடு, மாடு கட்டுவதற்கு ஒரு கொட்டகை அமைக்கலாம் அல்லது கிணறு வெட்டலாம் என்றெல்லாம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திலே MGNREGSல் வருகிறது. அதிலே கூட ஒரு மாறுதல் இருக்கிறது. உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு வனத் துறை அமைச்சராக இருக்கின்றார்கள். அவர்கள் அமைச்சராக இருந்த இலாக்காக்களில் சாலைப் பணியாளர்களெல்லாம் அவருடைய காலத்திலே வரப்பெற்றது. அதேபோல், Transport Minister ஆக இருந்தபொழுது mini busகள் அவருடைய காலத்தில்தான் வந்தது. வேலு அவர்கள், பொதுப் பணித் துறை அமைச்சராக வந்த பிறகு பெரிய, பெரிய கட்டடங்கள் landmark கட்டடங்களாகக் கட்டி, சாலைகளையெல்லாம் அகலப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நமது பன்னீர்செல்வம் அவர்கள் தனியாக, 54 ஆயிரம் கோடி ரூபாய் வரவுசெலவு திட்டத்தின் தலைவராக இருக்கிறார்.

அப்படி, ஏற்றுக்கொண்ட பொறுப்பிலே அமைச்சர்கள் சிறப்பாக செயல்படுகிறார்கள். வி. செந்தில்பாலாஜி மின்சாரத் துறை அமைச்சராக பொறுப்பேற்றிருக்கிறார். நான் முதன்முதலிலே 1989 ஆம் ஆண்டில் மின்சாரத் துறை அமைச்சர். நான் இப்போது 17வது மானியக் கோரிக்கையில் இருக்கிறேன். 1989 ஆம் ஆண்டில் மின்சாரத் துறை அமைச்சராக இருந்தபொழுது, இப்போது விவசாயத்திற்கு தனி பட்ஜெட் இருப்பது போல, அப்போது மின்சாரத் துறைக்கு தனி பட்ஜெட்டாக தனியாகத்தான் வரும். அப்போது கலைஞர் அவர்கள் சொன்னார், நேரு, நானே கொடுத்துவிடுகிறேன், பட்ஜெட்டை தாக்கல் செய்கிறேன் என்று சொன்னார். அவர்தான் அன்றைக்கு முதன்முதலிலே ஆரம்பித்து வைத்தவர். அப்படிப்பட்டவரை தினந்தோறும், காலையில் எழுத்தவுடன் நினைக்காமல் நாங்கள் இருப்பதில்லை. அப்படிப்பட்ட அந்த இயக்கத்திலே தொடர்ந்து பல்வேறு அமைச்சர்கள், பல்வேறு பொறுப்புகளில் மிகச் சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர்களுக்கெல்லாம் என்னுடைய வாழ்த்துகளையும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும், கிட்டத்தட்ட எதிரில் அமர்ந்திருக்கின்ற பாதி பேருக்கும் மேலாக, என்னுடன் தொடர்ந்து பணியாற்றியவர்கள்தான். உண்மையிலே எதிர்க்கக்கூடிய நிலையிலும் இருந்தது. அப்படி இருந்தாலும், இன்றைக்கும் எங்களோடு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அனைவருக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த வரலாற்று சிறப்புமிக்க பேரவையில் 5 ஆம் ஆண்டாக நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானியக் கோரிக்கை விவாதத்தின்மீது எனது பதிலுரையை தொடங்குகின்றேன்.

நகரங்களாக வளர்ந்து வருவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் இப்பேரவையில் 1971 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை அளித்த போது, "நகர்ப்புறங்களின் வசதி வாய்ப்புகளை கிராமத்து மக்கள் ஒரு கால கட்டத்திற்குள் பெற்றிட வேண்டுமென்னும் குன்றா ஆர்வத்துடன் இந்த அரசு செயல்படும்" என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

மேற்கண்ட தலைவர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நமது கழக அரசு அமையும்போதெல்லாம் இந்தத் துறையில் குடிநீர் வசதி, மழைநீர் வடிகால்களுடன் கூடிய சாலைகள், திடக்கழிவு மற்றும் திரவக்கழிவு மேலாண்மை, தெருவிளக்கு பராமரித்தல், பொதுச் சுகாதாரம் பேணுதல், நீர்நிலைகளை பராமரித்து நிலத்தடி நீரைப் பெருக்குதல், குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் மற்றும் ஆரம்பக் கல்வியை உறுதி செய்தல், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்து முதியோர் மற்றும் இளைஞர் நலம் பேணுதல், நவீன தகன மேடைகள் அமைத்தல், பசுமைப் பரப்பினை அதிகரித்தல், இணையதள வசதிகளை ஏற்படுத்துதல், நகரமைப்பு பணிகள் மற்றும் நகர்ப்புற வாழ்வாதார மேம்பாடு போன்ற எண்ணற்ற பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருவதை அனைவரும் அறிவீர்கள்.

மேற்கண்ட பணிகள் அனைத்தும் இத்துறையில் பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட 25 மாநகராட்சிகள், 137 நகராட்சிகள் மற்றும் 487 பேரூராட்சிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை குடிநீர் வாரியம், TUFIDCO, TNUIFSL, TWIC, CRRT மற்றும் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம் ஆகிய சார்பு நிறுவனங்கள்மூலம் வெகு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## ரூ.3001 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமுதாயக் கூடங்கள் அங்கன்வாடி மையங்கள்!

### 10 மாநகராட்சிகள் - 31 நகராட்சிகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன!

கடந்த நான்காண்டுகளில் நமது கழக அரசு, வளர்ந்து வரும் நகர்ப்புற வளர்ச்சி, வரலாற்று முக்கியத்துவம் மற்றும் ஆன்மீக சுற்றுலா தலங்கள், நகரத்திற்கு வந்து செல்லும் மக்களுக்கு தேவைப்படும் வசதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் நகர்ப்புற உள்ளாட்சிகளின் தரத்தை உயர்த்தியுள்ளது. இது வரை, 10 மாநகராட்சிகள், 31 நகராட்சிகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மேலும் சில ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளை, அருகிலுள்ள மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுடன் இணைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 16 மாநகராட்சிகளுடன் 149 ஊராட்சிகள், 4 நகராட்சிகள், 5 பேரூராட்சிகளும்; 41 நகராட்சிகளுடன் 146 ஊராட்சிகள், 1 பேரூராட்சியும்; 25 பேரூராட்சிகளுடன் 29 ஊராட்சிகளையும் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், 29 ஊராட்சிகள் 25 பேரூராட்சிகளாகவும், 7 பேரூராட்சிகள் 7 நகராட்சிகளாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. 22 ஊராட்சிகள் மற்றும் 6 பேரூராட்சிகள் சேர்ந்து

6 நகராட்சிகளாகவும் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவை முடிவுறும்போது, நகர்ப்புற உள்ளாட்சிகளின் எண்ணிக்கை பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட 25 மாநகராட்சிகளாகவும், 146 நகராட்சிகளாகவும், 491 பேரூராட்சிகளாகவும் இருக்கும்.

### ரூ.10,980 கோடியில் சாலைப் பணிகள்!

நகர்ப்புற உள்ளாட்சிகளில் பொதுமக்களின் சிறப்பான போக்குவரத்தினை உறுதி செய்யும் நோக்குடன் கடந்த நான்காண்டுகளில் ரூ.10,980 கோடி மதிப்பீட்டில் 17,774 கி.மீ. நீளத்திற்கு சாலைப் பணிகள் முடிக்கப்பட்டும், 1,280 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் நடைபெற்றும் வருகின்றன. ரூ.8,039 கோடி மதிப்பீட்டில் 380 குடிநீர் திட்டம் மற்றும் மேம்பாட்டு பணிகள் முடிக்கப்பட்டும், 1,220 பணிகள் நடைபெற்றும் வருகின்றன. ரூ.5,171 கோடி மதிப்பீட்டில் 2,253 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்டும், 460 கி.மீ. நீளத்திற்கு பணிகள் நடைபெற்றும் வருகின்றன. ரூ.6,986 கோடி மதிப்பீட்டில் 42 பாதாள சாக்கடை திட்டம் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப்பட்டும் 51 பணிகள் நடைபெற்றும் வருகின்றன. ரூ.1,002 கோடி மதிப்பீட்டில் 111 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.1,833 கோடி மதிப்பீட்டில் திடக்கழிவிலிருந்து உரம் தயாரிக்கும் மையங்கள், வள மீட்பு மையங்கள், தனி நபர் கழிப்பிடங்கள், சமுதாய மற்றும் பொதுக் கழிப்பிடங்கள் உள்ளிட்ட பணிகளில் 11,340 பணிகள் முடிவுற்றும், 1,799 பணிகள் நடைபெற்றும் வருகின்றன. ரூ.858 கோடி மதிப்பீட்டில் இதுவரை 7,10,000 எண்ணிக்கையிலான தெரு விளக்குகள் LED விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளன. ரூ.1,564 கோடி மதிப்பீட்டில் 107 புதிய பேருந்து நிலையங்கள் மற்றும் மேம்பாட்டு பணிகள் முடிவுற்றும், 110 பணிகள் நடைபெற்றும் வருகின்றன. ரூ.932 கோடி மதிப்பீட்டில் 153 சந்தைகள் கட்டி முடிக்கப்பட்டும், 77 சந்தைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்றும் வருகின்றன.

ரூ.242 கோடி மதிப்பீட்டில் 92 அறிவுசார் மையங்கள் மற்றும் 44 நூலகங்கள் கட்டி முடிக்கப்பட்டும்; 10 அறிவுசார் மையங்கள் மற்றும் 134 நூலகப் பணிகள் நடைபெற்றும் வருகின்றன. ரூ.838 கோடி மதிப்பீட்டில் 1,145 நீர் நிலைகள் தூர்வாரி, கரைகள் பலப்படுத்தி சீரமைக்கப்பட்டும், 152 நீர் நிலைகள் மேம்பாட்டு பணிகள் நடைபெற்றும் வருகின்றன. ரூ.436 கோடி மதிப்பீட்டில் 920 புதிய பூங்கா மற்றும் அபிவிருத்திப் பணிகள் முடிக்கப்பட்டும், 197 பூங்கா பணிகள் நடைபெற்றும் வருகின்றன. ரூ.412 கோடி மதிப்பீட்டில் 230 நவீன எரிவாயு தகன மேடைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ரூ.338 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான அலுவலக கட்டடங்கள் 27 கட்டி முடிக்கப்பட்டும், 74 பணிகள் நடைபெற்றும் வருகின்றன.

### 8285 வாகனங்கள் கொள்முதல்!

சென்னை தவிர பிற நகர்ப்புற உள்ளாட்சிகளில் ரூ.398 கோடி மதிப்பீட்டில் biomining மூலம் தேக்கத் திடக்கழிவுகள் அகற்றி, நிலத்தினை மீட்டெடுக்கும் பணிகள் பல்வேறு நகரங்களில் முடிவுற்றும், சில நகரங்களில் நடைபெற்றும் வருகின்றன. இப்பணிகள் முடியும்போது 692 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்படும். ரூ.554 கோடி மதிப்பீட்டில் திடக்கழிவு மற்றும் திரவக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு 8,285 வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவை தவிர நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமுதாயக் கூடங்கள், அங்கன்வாடிகள் உள்ளிட்ட இதர பல்வேறு பணிகளுக்கு ரூ.3,001 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. நகர்ப்புற உள்ளாட்சிகளின் மின் கட்டணம், குடிநீர் விநியோக கட்டணங்கள், பணியாளர்களுக்கான ஊதியம் ஆகியவற்றிற்காக ஆண்டுதோறும் சுமார் ரூ.5,300 கோடி நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு அரசுமூலம் வழங்கப்பட்டு வருகிறது.

குடிநீர் கட்டணம், சொத்து வரி, தொழில் வரி, குத்தகை இனங்கள், கட்டட அனுமதி, பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் ஆகியவற்றை பொதுமக்கள் இணையதளம்மூலம் எளிதாக பெறும் வகையில் இணையதள வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மன்னர்களின் தலைநகரமாக விளங்கிய இராமநாதபுரம், விவசாயம் சார்ந்த வணிகம், அபரிதமான தொழில் வளர்ச்சியினை கொண்டுள்ள பெரம்பலூர் ஆகிய இரு நகராட்சிகளையும் மாநகராட்சிகளாக தரம் உயர்த்துவது குறித்து முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி முடிவெடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## ரூ.2,423 கோடியில் சென்னை மாநகருக்கு சீரான குடிநீர் வழங்க 100 கி.மீ. நீளத்திற்கு முதன்மைச் சுற்றுக்குழாய் அமைக்கும் திட்டம்!

நகரப்புற உள்ளாட்சிகளில் புதிதாக அனுமதிக்கப்பட்ட பொறியியல், நகரமைப்பு மற்றும் சுகாதார பிரிவு பணியிடங்களில் 2,566 பணியாளர்கள் அண்ணா பல்கலைக்கழகம்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு விரைவில் நியமிக்கப்படவுள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் நவீன உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு மற்றும் சேவைகளை வழங்குவதற்காக "சிங்கார சென்னை 2.0" திட்டம் 2021 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் இது வரை ரூ.966 கோடி மதிப்பீட்டில் 1,048 பணிகள் முடிக்கப்பட்டும், ரூ.397 கோடி மதிப்பீட்டில் 103 பணிகள் நடைபெற்றும் வருகின்றன. சென்னை பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் ரூ.991 கோடி மதிப்பீட்டில் திடக்கழிவுகளை biomining முறையில் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிவுறும்போது 568 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்படும். சென்னையில் ரூ.906 கோடி மதிப்பீட்டில் 13 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டும், 12 பாலங்கள் கட்டும் பணிகள் நடைபெற்றும் வருகின்றன. சென்னை பெருநகர பகுதியில் அதிகரித்து வரும் போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்ய பெருநகர சென்னை காவல்துறை மற்றும் பெருநகர சென்னை போக்குவரத்து கழகத்துடன் இணைந்து JICA கடன் உதவியுடன் ITMS பணிகள் ரூ.530 கோடி மதிப்பீட்டில் பெருநகர சென்னை மாநகராட்சிமூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### மாற்றுத் திறனாளிகளுக்கான நடை பாலங்கள்!

பெருநகர சென்னை மாநகராட்சியில் மாற்றுத் திறனாளிகள் கடலின் அழகை அருகில் சென்று ரசிக்கும் வண்ணம், மெரினா மற்றும் பெசன்ட் நகர் கடற்கரைகளில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் "மர நடைபாலங்கள்" அமைக்கப்பட்டுள்ளன. பெருநகர சென்னை மாநகராட்சி, முதன்முறையாக, பொது மற்றும் தனியார் துறை பங்களிப்புடன் கழிப்பறைகளை புதிதாகக் கட்டவும், பழையனவற்றைப் புதுப்பித்து, 8 ஆண்டுகள் பராமரிக்கவும், மண்டலம் 5, 6 மற்றும் மெரினா கடற்கரைப் பகுதிகளிலுள்ள பணிகளை ரூ.430 கோடி மதிப்பீட்டிலும், இதர பகுதிகளிலுள்ள பணிகளை ரூ.1,202 கோடி மதிப்பீட்டிலும் துவக்கியுள்ளது.

"நீலக்கொடி கடற்கரை" திட்டம்மூலம் ரூ.6 கோடியில் மெரினா கடற்கரை தரம் உயர்த்தப்படவுள்ளது. பல்வேறு சேவைகளான மின்வடம், குடிநீர் மற்றும் கழிவு நீர்க் குழாய்களுக்கான தனிப் பாதை போன்ற சிறப்பு அம்சங்கள் கொண்ட நடைபாதைகளுடன் கூடிய பெருநகர சாலைகள் சென்னை சிட்டி பார்ட்னர்ஷிப் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டு, 5.6 கி.மீ. நீளமுள்ள 4 சாலைகள் ரூ.132 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. மேலும், 6.6 கி.மீ. நீளமுள்ள 5 சாலைகள் ரூ.122 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன.

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்!

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மக்களும் பயன்பெறும்வகையில் குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்துவதற்காகவும், பாதாள சாக்கடைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவும் 1971 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உருவாக்கப்பட்டது. நமது கழக அரசு மீண்டும் 2021 ஆம் ஆண்டு அமைந்தபோது, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் 4.26 கோடி மக்களுக்கு 1935 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. கடந்த 4 ஆண்டுகளில் நமது கழக அரசு, இவ்வாரியம்மூலம் ரூ.9,011 கோடி மதிப்பீட்டில், 71 குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது.

மேலும், ரூ.891 கோடி மதிப்பீட்டில் 52 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை மறுசீரமைத்துள்ளது. இதன்மூலம் கூடுதலாக 102 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 351 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

ஆக, தற்பொழுது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் தமிழ்நாட்டிலுள்ள 13 மாநகராட்சிகள், 70 நகராட்சிகள், 325 பேரூராட்சிகள் மற்றும் 51,048 ஊரகக் குடியிருப்புகளுக்கு சராசரியாக நாளொன்றுக்கு 2,286 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் 5.28 கோடி மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், தற்பொழுது ரூ.17,453 கோடி மதிப்பீட்டில் 25 கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளும், ரூ.767 கோடி மதிப்பீட்டில் 4 குடிநீர்த் திட்ட மறுசீரமைப்புப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இதன்மூலம், 137 இலட்சம் மக்கள் பயன்பெறும்வகையில், இன்னும் கூடுதலாக 806 மில்லியன் லிட்டர் குடிநீர் கிடைக்கும்.

ஆக, இவை நிறைவுறும்போது, அதாவது செப்டம்பர் 2025ல் மொத்தமாக 6.65 கோடி மக்கள் பயன்பெறும் வகையில், 3,092 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க முடியும்.

புதிதாக ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் இரண்டாம் கட்டம்,

சேந்தமங்கலம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், திண்டுக்கல் மாநகராட்சிக் கூட்டுக் குடிநீர்த் திட்டம்,

கரூர்திருச்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம்,

புதுக்கோட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டம்,

மயிலாடுதுறை கூட்டுக் குடிநீர்த் திட்டம்,

தென்காசி கடையநல்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், தூத்துக்குடிதிருச்செந்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்,

ஈரோடு அந்தியூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், திருப்பூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், திருவள்ளூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், காணை கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் கள்ளக்குறிச்சி,

கோயம்புத்தூர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் உள்ளிட்ட 16 திட்டங்கள் ரூ.16,875 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த, (மேசையைத் தட்டும் ஒலி) தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. ஆக, இந்த 16 திட்டங்களும் நிறைவுறும்போது, 7.5 கோடி மக்களுக்கு 3,627 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க இயலும்.

### பாதாள சாக்கடைத் திட்டங்கள்!

2024 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஃபெங்கல் புயலினால் திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், ராணிப்பேட்டை, தருமபுரி, கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, நீலகிரி மற்றும் சேலம் மாவட்டங்களிலுள்ள 76 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பாதிப்படைந்தன. இவை அனைத்தும் போர்க்கால அடிப்படையில் சீரமைக்கப்பட்டுப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டன.

கடந்த 4 ஆண்டுகளில் 17 பாதாள சாக்கடைத் திட்டங்கள் ரூ.1,777 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும், 10 பாதாள சாக்கடைத் திட்டங்கள் ரூ.3,608 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

### சென்னை குடிநீர் வாரியம்!

நமது கழக அரசு 2021 ஆம் ஆண்டு அமைந்தபோது, சென்னைப் பெருநகரின் மக்களுக்கு நாளொன்றிற்கு 830 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. கடந்த நான்காண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகளால் தற்பொழுது, தினமும் 1,100 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில், 15 புதிய குடிநீர்த் திட்டப் பணிகள் ரூ.2,089 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதனால் கூடுதலாக 19 இலட்சம் மக்கள் பயனடைந்து வருகின்றனர். ரூ.560 கோடி மதிப்பீட்டில் 10 குடிநீர்த் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டப் பணிகள் முடிவுறும்போது, மேலும் 9 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்